We Shine Academy™
guiding you to get through

# தினசரி நடப்பு நிகழ்வுகள் - 20.07.2018

## தமிழக நிகழ்வுகள்

- அதிநவீன பால் பதனிடும் தொழிற்சாலை தமிழக அரசு சார்பில் காஞ்சிபுரம் மாவட்டம் சோழிங்கநல்லூரில் ஜூலை 17 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.
    - அதிநவீன தொழில்நுட்ப முறையில் பதப்படுத்தப்பட்ட பால் சாதாரண அறை வெப்ப நிலையிலேயே (Room Temperature) 90 நாள் கெடாமல் இருக்கும்.




## இந்திய நிகழ்வுகள்

- மும்பையில் உள்ள மேற்கு இரயில்வேயின் கீழ் வரும் எல்பின்ஸ்டன் ரோடு இரயில் நிலையத்தின் (Elphinstone Rood station) பெயர் 'பிரபாதேவி இரயில் நிலையம்' (Prabhadevi station) என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.




- சுற்றுலாத் துறைக்கு முக்கியமான ஊக்கத்தை அளிப்பதற்கான, 2வது தேசிய சுற்றுலா மாநாடு இராஜஸ்தான் மாநிலத்தின் தலைநகரான ஜெய்ப்பூரில் நடைபெற உள்ளது.
  - முதல் தேசிய சுற்றுலா மாநாடு சண்டிகரில் 2017-ம் ஆண்டு நடைபெற்றது.




**உலக நிகழ்வுகள்**

- ஐ.நா மனித உரிமைகள் சபைக்கு (UNHRC – United Nation Human Rights commission) அமெரிக்காவிற்கு பதிலாக ஐஸ்லாந்தினை ஐக்கிய நாடுகள் பொது சபை (United Nation Assembly) தேர்வு செய்துள்ளது.
  - ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையிலிருந்து அமெரிக்கா வெளியேறுவதை அடுத்து அதன் பணியை தொடர்வதற்காக ஐஸ்லாந்தினை U.N General Assembly தேர்வு செய்துள்ளது.
- **குறிப்பு**
  - UNHRC(United Human Rights Commission)
  - 1946-ல் தொடங்கப்பட்டது.
  - இதன் தலைமையகம் சுவிட்சர்லாந்தின் ஜெனிவாவில் உள்ளது.
  - Dec 10, 1948ல் மனித உரிமைகள் பிரகடனத்தை ஐ.நா. பொதுச் சபையில் தாக்கல் செய்துள்ளது.

We Shine Academy™

## விளையாட்டு நிகழ்வுகள்

- விம்பிள்டன் டென்னிஸ் போட்டிகளில் நடுவராக பங்கேற்கும் மிகவும் இளம் வயது (23வயது) இந்திய நடுவர் என்ற பெருமையை 'சகார் காஷ்யப்'(Sagar Kashyap) பெற்றுள்ளார்.



- செக் குடியரசின் மில்சேன் நகரில் நடைபெற்ற 28வது சர்வதேச துப்பாக்கிச் சுடுதல் போட்டியில் இந்தியா 11 தங்கம், 7 வெள்ளி, 6 வெண்கல பதக்கத்துடன் சாதனை படைத்துள்ளது.
    - இந்தப் போட்டியில் இந்தியாவின் மனுபாக்கர் 4 தங்கம் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



WeShine Academy™

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- அமெரிக்காவின் டெக்சாஸ் மகாணத்தில் இருந்து 'ப்ளூ ஆரிஜின்' என்னும் இராக்கெட், விண்வெளிக்கு சுற்றுலா செல்வதற்காக அமேசான் நிறுவனத்தால் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.




## முக்கிய தினங்கள்

- சர்வதேச மண்டேலா தினம் - ஜூலை 18
  - கருப்பின மக்களின் விடுதலைக்காகப் போராடிய நெல்சன் மண்டேலாவை பெருமைப்படுத்தும் விதமாக, ஐ.நா சபையால் 2009ம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் அவரது பிறந்த நாளான ஜூலை 18ம் தேதி சர்வதேச மண்டேலா தினமாக கொண்டாடப்படுகிறது.
- குறிப்பு
  - 2018ம் ஆண்டு அவரின் நூற்றாண்டுப் பிறந்த நாளாகும்.
  - இந்தியாவின் சார்பில் 1990-ல் இந்தியாவின் உயரிய விருதான பாரத ரத்னா வழங்கப்பட்டது.
  - 1993-ல் அமைதியையும், நிலைத்தன்மையும் ஏற்படுத்தியற்காக நோபல் பரிசும் வழங்கப்பட்டது.



**வர்த்தக நிகழ்வுகள்**

- ‘கிஷான் மேலா-கூட்டம்’ – SBI வங்கியானது கர்நாடகா மாநிலத்தில் உள்ள விவசாயிகளுடன் அவர்களது விவசாய கடனை தீர்ப்பதற்கான ஆலோசனைக் கூட்டம் ‘கிஷான் மேலா’ என்ற பெயரில் புதிதாக தொடங்கியுள்ளது.

We Shine Academy™

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344 www.weshineacademy.com